ஆழி சூழ் உலகு நாவல் காட்டும் நாட்டுப்புறப் பாடல்கள்

ஆய்வாளர்

ர.விண்ணிலவு

(23PHD0213) முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, விஐடி பல்கலைக்கழகம், வேலூர்.

Email: vinnilavu.r@vit.ac.in

நெறியாளர்

முனைவர் அ. மரிய செபஸ்தியான்

உதவிப் பேராசிரியர், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, விஐடி பல்கலைக்கழகம், வேலூர்., Email: mariasebastin.a@vit.ac.in

DOI:- 10.5281/Arimaa.15130885

முன்னுரை

இலக்கியம் என்பது பொதுவாக உருவாகும் சூழலை வெளிப்படையாகக் காட்டும் தன்மையது எனலாம். அந்த வகையில் இலக்கியம், தோன்றும் காலத்தின் கண்ணாடியாக விளங்குகின்றது. ஒரு நாட்டில் வாழும் மக்களின் வரலாற்றையும், வாழ்வியலையும் அறிய வேண்டுமாயின் எழுத்துகளின் வாயிலாக எளிதில் பெற முடியும். எனவே மக்களின் வாழ்வியலை படம்பிடித்து காட்டும் கருவிகளாக, இலக்கியத்தில் இடம்பெறும் பாடல்களையும் நாம் எடுத்துக் கொள்ளலாம்.

அவ்வாறு இலக்கியத்தில் வழங்கும் பாடல்கள் பெரும்பாலும் கற்பனைகள் அதிகமின்றி, மக்களின் வாழ்க்கை சூழலோடு ஒட்டி நிகழும் சம்பவங்களில் வெளிப்படும் ஒரு இலக்கிய வடிவங்களாகும். இப்பாடல்கள் எளிய நடையில் அனைவரும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் இயற்றபட்டுள்ளது. இத்தகைய வடிவங்களைக் கொண்ட மக்கள் இலக்கியம் அறிஞர்களிடையே **‘நாட்டுப்புற இலக்கியம்’** என்று தனிப்பெரும் பிரிவாக கருதபடுகிறது. இவை மக்களிடையே வாய்வழியே பரவியபோதும் சில நேரத்தில் எழுத்துருவில் இலக்கியத்திலும் இடம்பெற்றுள்ளது.

மேற்கூறிய நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு சங்க இலக்கியங்கள் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரை பரவியுள்ளன. அந்த வகையில் கடலும் கடல் சார்ந்த பரதவ மக்களின் வாழ்வியலை ஆழமான முறையில் ஆவணப்படுத்தும் **‘ஆழி சூழ் உலகு’** நாவலில் இடம்பெறும் நாட்டுப்புறவியல் சார்ந்த பாடல்களை வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

நாட்டுப்புற இலக்கியம்

உழைக்கும் மக்களின் மனதில் பதிந்துள்ள உண்மைகளின் வெளிப்பாடே நாட்டுப்புறவியல் எனலாம். அவை தனி இலக்கியமாக உருவெடுப்பதே நாட்டுப்புற இலக்கியம்.

நாட்டுப்புறவியல் குறித்து சு. சக்திவேல் தம் நூலில் 'மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றிவிட்டன எனக் கருதலாம். மண்ணின் மைந்தர் தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர்பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள்'[1] என்கிறார். எனவே மக்களின் உணர்ச்சியின் வெளிப்படே நாட்டுப்புற இலக்கியம் எனலாம்.
நாட்டுப்புற இலக்கியங்களில், மக்கள் தங்களுடைய வாழ்வில் ஏற்படும் பல்வேறுபட்ட சூழலில் வெளிப்படும் உணர்ச்சியை வெளிப்படுத்த பாடலை ஒரு கருவியாகக் கையாண்டுள்ளனர். அப்பாடல்கள் மக்களின் பேச்சு வழக்கில் உணர்ச்சியின் வெளிப்பாடாகவும், அனுபவ முதிர்ச்சியாகவும் வழிவழியாக வெளிப்படுகின்றன. நாட்டுப்புற இலக்கியங்களை ஆறு. இராமநாதன் 'மொழிநடை (Texture), பாடம் (Text), வழங்கப்படும் சூழல் (Context), ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுப் பாடல்கள் (Songs), கதைகள் (Tales), பழமொழி (Proverbs), புதிர்கள் (Riddles) என்று நான்கு வகையாகப் பிரிப்பர்'[2]. இக்கருத்திலிருந்து நாட்டுப்புற இலக்கியங்களின் வடிவங்கள் தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக வாய்வழியாக மக்களால் கடத்தப்பட்டு, அந்தந்த சூழலுக்கேற்ப மாற்றம் பெற்று வருகின்றன என்பது புலனாகும்.

நாட்டுப்புறப் பாடல்கள்

பொதுவாக மக்களின் ஆழ்மனதில் இருக்கக்கூடிய இன்ப துன்ப உணர்ச்சிகளின் ஒரு பகுதியே பாடலாக வெளிப்படுகின்றன. இப்பாடல்களின் மூலம் அவர்களின் வாழ்க்கைச் சூழலையும் அறிந்து கொள்ள முடியும். எனவே நாட்டுப் பாடல் குறித்து, நா. வானமாமலை 'நாட்டுப் பாடல்கள் கிராமப்புற வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புள்ளவை. கதைப் பாடல்கள் தவிர மற்றப் பாடல்கள் நாட்டுப்புற வாழ்க்கையின் அன்றாட சம்பவங்களையே பொருளாகக் கொண்டவை. இதனால் தான் வாழ்க்கையின் சாதாரண சம்பவங்களான பிறப்பு, குழந்தைப்பருவ நிகழ்ச்சிகள், விளையாட்டுகள், தொழில்கள், பஞ்சம், கிராம தேவதைகள் முதலியன நாட்டுப்பாடல்களின் பொருளாக அமைந்துள்ளன. ஆனால் இவற்றுள்ளும் சமூக அமைப்பின் தன்மையும், அதனால் தனி மனிதன் உணர்வில் ஏற்படும் சிந்தனைகளும் வெளியாகத்தான் செய்கின்றன'[3] என்னும் கருத்து நாட்டுப்புறப் பாடலுக்கான புரிதலை ஏற்படுத்துகிறது.

இப்பாடல்கள் இயற்கையாக மக்களால் இயற்றப்படுவதாலும், இயல்பான பேச்சுவழக்கில் உள்ள சொற்களைப் பயன்படுத்துவதாலும் குறிப்பிட்ட மக்களிடையே சுழன்று கொண்டிருக்கிறது எனலாம். இது குறித்து நாட்டுப்புற நந்தவனம் நூலில் 'நாட்டுப்புறப் பாடல்கள் பாமர மக்களால் உருவாக்கப்படும், வாய்மொழிப் பாடலாகப் பாடப்படும். இன்று வரை காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றன. ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்கவழக்கங்களை, வரலாற்றை உள்ளபடி காட்டுவன நாட்டுப்புறப்

பாடல்களாகும்'[4] என ஏ.ஆர்.ஈசுவரி அவர்கள் விளக்கம் அளித்துள்ளார். எனவே நாட்டுப்புறப் பாடல்கள் மக்கள் வாழும் நானிலத்திலும் தோற்றம் பெறுவதால், அப்பாடல்களை மக்கள் பாடல்கள் என்றும் அழைக்கலாம். நாவலில் கடலையே தம் வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும், பரதவர்களின் வழிவந்தவர்களாக என்னும் ஆமந்துறையில் வாழ்ந்த மக்களிடம், துளிர்க்கும் பாடல்களை நாவலின் மூலம் வெளிப்படுத்தும் முயற்சியே இக்கட்டுரை எனலாம்.

நாட்டுப்புறப் பாடல் வகைகள்

நாட்டுப்புறப் பாடல்கள் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை முறையே தாலாட்டு முதல் ஒப்பாரி வரை, பல வகைகளாக 1. பாடப்படும் சூழல் 2. நிகழ்வுகளின் தன்மைக்கேற்ப அமைந்துள்ளன. இவற்றின் வகைகள் குறுத்து அறிஞர்களிடையே வேறுபாடு காணப்படுகிறது. அதில் மரியா லீச் (Maria Leach) அவர்கள் நாட்டுப்புறப் பாடல்களை ஐந்து வகையாக வகைப்படுத்தியுள்ளார்.

'1. உணர்ச்சிப் பாடல்கள் (Emotional)

2.வாழ்வியல் பாடல்கள் (Daily life)

3.வாழ்வின் முக்கிய நிகழ்வின் பாடல்கள் (Crucial movement of life) (பிறப்பு, மணம், இறப்பு, பிரிவு, தாயக நாட்டம், போர்ப்பாடல்)

4.குழந்தைப் பாடல்கள் (Nostalgia)

5.சமயப் பாடல்கள் (War)'[5]

ஆறு. இராமநாதன் அவர்கள், நாட்டுப்புறப்பாடல் வகைகள் என்ற தம் நூலில் சூழலை மட்டுமே அளவுகோலாகக் கொண்டு புதிய வகைபாடாக எட்டு வகைகளாக வகைப்படுத்தியுள்ளார். அவை,

'1. தாலாட்டு 2. குழந்தை வளர்ச்சி நிலைப் பாடல்கள் 3. விளையாட்டுப் பாடல்கள்
4. தொழில் பாடல்கள் 5. வழிபாட்டுப் படல்கள் 6. கொண்டாட்டப் பாடல்கள்
7. இரத்தல் பாடல்கள் 8. இறப்புப் பாடல்கள்'[6]

என்று தம் விரிவான ஆய்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வகைப்பாட்டின் அடிப்படையில் மக்களால் பாடப்படும் பாடல்கள் அந்ததந்த சூழலைப் பொருத்து வகைப்படுத்தப்படுகிறது.

நாட்டுப்புறப் பாடல் இலக்கணம்

நாட்டுப்புறப் பாடல்கள் மனித அனுபவத்தின் வெளிப்பாடாகும். அவை இலக்கிய, இலக்கணத்திற்கும் உட்படவில்லை என்றாலும் கூட அவற்றின் பண்புகளை ஒத்துள்ளவாறு இலக்கணம் வகுத்துள்ளது, தமிழின் மிகவும் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம். இந்நூலில் குறிப்பிடும் பண்ணத்தி மற்றும் புலன் என்ற இரு

வகைகளும் நாட்டுப்புறப் பாடல்களுக்கான இலக்கணத்தைப் பெற்றுள்ளதாக அறிஞர்களிடையே பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன.

‘பாட்டிடைக் கலந்த பொருளவாகிப்
பாட்டின் இயல பண்ணத் திய்யே’ (தொல், செய்.79)

எனும் தொல்காப்பிய வரிகள், வாய்மொழியாக வழங்குவனவற்றோடு சார்த்திச் சொன்னாலும் பண்ணத்தியென்பது நாடோடிப்பாடல்களையே குறிப்பது என்று கொள்ளலாம்’[7] என கி.வா.ஜகநாதன் குறிப்பிடுகிறார். ஆனால் ‘பண்ணத்தி என்பது நாட்டுப்புறப் பாடல்களைச் சுட்டுகிறது என்பதை விடப் புலன் என்பது பொருத்தமாக அமைகின்றது என்று அழகப்பன் (194) குறிப்பிடுகின்றார்.

புலனைக் குறித்து தொல்காப்பியர்,

‘தெரிந்த மொழியால் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணந்தோரே’ (செய்யுளியல்-233)

என்று பேச்சுமொழியில் அமைவதும் எளிதில் புலன் என்று விளக்கம் அளிக்கிறார்’[8] இதிலிருந்து தொல்காப்பிய காலத்திலேயே நாட்டுப்புறப் பாடல்கள் மக்களிடையே பேச்சு வழக்கில் பழக்கத்தில் இருந்துள்ளன என அறியலாம். அந்த வகையில் ஜோ டி குரூஸ் இயற்றிய ‘ஆழி சூழ் உலகு’ நாவலில் இடம்பெற்றுள்ள பரதவ மக்களிடையே உள்ள பாடல்களின் வாயிலாக மக்களின் வாழ்க்கை சூழலையும், அறிவினையும் அறிந்துகொள்ளலாம்.

நாவலுக்கு முன்னுரை எழுதிய டி.அனில்குமார் ‘நிரந்தரமாகக் கடலுடன் புழங்கும் நாட்டார் சமூகம் என்ற நிலையில் பரதவர்கள் சேர்த்து வைத்திருக்கும் மரபான அறிவுகளை ஆவணப்படுத்துகிறார் ஜோ டி குரூஸ்’[9] எனக்கூறும் கருத்திலிருந்து அவர்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் கருத்து கருவூலமே இந்நாவல் எனலாம்.

கதைச்சுருக்கம்

ஆழி சூழ் உலகு என்ற நாவலில், 1933 முதல் 1985 வரை ஏறத்தாழ ஐம்பத்திரண்டு ஆண்டுகளில் ஆமந்துறையில் நடந்த, நிகழ்வின் தொகுப்பே ஆகும். புலிச்சுறா பிடிப்பதற்காகக் கடலுக்குள் செல்ல, கடலின் சீற்றத்தால் கட்டுமரம் கவிழ்ந்து நீரில் மிதக்கும் மூன்று தலைமுறையினரான கோத்ரா, சூசை, சிலுவை ஆகியோருடன் நாவல் தொடங்கி, இதற்கு முன் நிகழ்ந்த கதையின் இடைச்செருகளாக விரிந்து பரவுகிறது கதை. ஆமந்துறை என்ற சிற்றூரில் வாழ்ந்த பரதவர்களில் மூத்தவர் மற்றும் மீன்வல்லுநர் தொம்மந்திரை, அவரது நண்பனும் சீடருமான கோத்ரா என இவர்களின் தலைமுறைகளே கதையாக விரிந்து பரவுகிறது. அடுத்து பரதவர்களின் வணிகம் கொஞ்சம் கொஞ்சமாக வேறோருவர் கைக்கு மாறுவதும். தூத்துக்குடி ஒரு முக்கிய துறைமுகமாக

வளர்ச்சிபெறுவதும் நாவலில் காட்டப்பட்டுள்ளது. இந்நாவலின் முக்கியமான சிறப்பம்சம் ஒரு சமூகத்தின் கதையினை, அதில் இடம்பெறும் கதாப்பாத்திரங்களின் வழியே வெளிப்படுத்திக் கொண்டே செல்கிறார் ஆசிரியர். ஒரு கடலோர கிராமத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைச் சூழலை கண்முன்னே காட்சிப்படுத்தியுள்ளார் எனலாம். ஆகவே நெய்தல் நிலத்தைப் பற்றிய விரிவான ஆய்வு நாவலாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

நாட்டுப்புறப்பாடல்களின் வடிவ நோக்கம்

நாட்டுப்பாடல்கள் பொதுவாக ஏதேனும் ஒரு சூழலை தாங்கியவாறு மக்களின் மொழியாகவே உருவாகும் சிந்தனை வெளிப்பாடாகும். இதன் மூலம் சமூகத்தின் உண்மை நிலையினையும் அறிந்து கொள்ளலாம். மேலும் சில சொல்ல முடியா மனக்குமுறல்களும் பாடலாக வடிவம் பெறுகின்றன. அப்பாடல்கள் தனிநபர், குழுவாகவும் பாடப்படும். இப்பாடல்கள் முன்னோர்களிடம் இருந்து பரவுவதால் ஒரு பாடலின் அடிகள் இரண்டு முறையும் வரும். அதே மாதிரி குழுவாகப் பாடும்போது பின்பாட்டாகவும் பாடப்படுகிறது. இது நாட்டுப்புறப் பாடல் வடிவங்களின் முக்கியமான பண்பாகும்.

வழிபாட்டுப் பாடல்கள்

கிராமத்து மக்களிடம் பொதுவாகவே ஒரு தொழிலைத் தொடங்கும் முன்பு தெய்வத்தை வழிபடும் பழக்கம் உள்ளது. அதேபோல் ‘ஆழி சூழ் உலகு’ நாவலில், தொம்மந்திரை தன் மனைவியின் உடன்பிறந்த அண்ணன்மார்கள், பாய்மரக்கப்பலில் கொழும்பிலிருந்து கொடுத்துவிடப்பட்ட சரக்குகளை வாங்குவதற்கு, தூத்துக்குடி துறைமுகத்துக்கு வந்தான். அங்கு கப்பலின் மேல் நின்றுகொண்டு தண்டல் தொழில்புரியும் துறைக்காரர் பனிமய மாதாவின் கோவிலை நோக்கி கைக்கூப்பி வணங்கிப் பாடிக்கொண்டிருந்தார். அப்பாடல்,

‘மாதர்களின் மாதிரியே
மாயிருளில் ஒளிர் தாரகையே
மாதரசியே மனவொளிதாராய்
மாசு அகலச் செய்வாய்
கலங்கரை தீபமே
கலங்களின் தாரகையே
துலங்கிடும் ஒளியே
கலங்குவோர் கதியே
காத்திடுவாய் தாயே’[10]

என்று உள்ளத்தில் தோன்றுவதை பாடலாக பாடி, மக்கள் மனதிலுள்ள மாசுகளை அகற்றி, துன்பத்தில் இருந்தும் எங்களைக் காத்திடுவாய் என்றும், தங்களுள் எல்லாமுமாக இருப்பவளே என்று பாடலாகப் பாடி தெய்வத்தை இருகரம் கூப்பி வழிபடுகின்றனர்.

மேலும் இந்நாவலில் உள்ள பெலவேந்திரர் பங்குக் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை தோறும் பூசை நடைபெறுவதும், பாடல் பாடுவதும் வழக்கமான ஒன்றாகும். அவ்வாறே ஒரு ஞாயிற்றுக்கிழமையும் வழிபாட்டின் போது, காகு சாமியார் பாடலைப் பாடத் துவங்கியவுடன் அவரைப் பின்தொடர்ந்து மற்றவர்களும் பாடத் தொடங்கினர்.

‘ஈசோ புல்லினால்
என் மேல் தெளிப்பீர்
ஆண்டவரே நான்
தூய்மையாவேன்
நீரே என்னைக் கழிவ
நானும் உன்ற பனிதலும்
வெண்மை ஆவேன்
தேவாலய வலப்புறமிருந்து
தண்ணீர் புறப்படக் கண்டேன்
அல்லே லூயா... அந்தத் தண்ணீர்
யாரிடம் வந்ததோ அவர்கள்
யாவருமே ஈடேற்றும்
பெற்றுக் கூறுவார்
அல்லே லூயா... அல்லே லூயா... அல்லே லூயா...’[11]

என பாடல் பாடி தெய்வத்தை வழிபடுகின்றனர். நாவலில் இடம்பெற்ற மக்கள் மேற்கூறியவாறு, தெய்வங்களை வழிபடும் போது பாடல்களைப் பாடியுள்ளனர். எனவே இப்பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களின் தன்மைகளைப் பெற்றுள்ளன எனலாம்.

அம்பாப் பாடல்கள்

நெய்தல் நிலமாகிய கடலும் கடல் சார்ந்த வாழும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் பரதவர்கள். இத்தொழில் செய்பவர்களுக்கு கடலைப் பற்றிய அறிவும், நுண்ணறிவும், நுட்பமும், அனுபவமும், உடல் வலிமையும் இன்றியமையாத பண்புகள் ஆகும். கடல் சார்ந்த தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள், அவர்களின் வேலைச்சுமை தெரியாமலிருக்கவும், உடலில் ஏற்படும் அசதிகளைப் போக்குவதற்காகவும் பெரும்பாலும் அம்பாப்பாடல் பாடப்படுகின்றன எனலாம். அம்பாப் பாடலைப் பற்றி நா. வானமாமலை கூறும் கருத்து ‘அவர்களுடைய பாடல்களில் ஆபத்திலிருந்து காக்கும்படி கடவுளை வேண்டிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் படகைக் கடலில் இறக்கும் போதும், கரையிலேற்றும் பொழுதும், தண்டு வலிக்கும் பொழுதும், பாய்மரத்தை மேலேற்றி இறக்கும் பொழுதும் கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது. இந்த உழைப்போடு கலந்துதான் அவர்கள் பாடல்கள் வெளியாகிறது. இம்மக்களின் பாடலுக்கு ‘அம்பாப் பாடல்’ என்று ஏன் பெயர் வந்தது என்று காரணம் சொல்வது கடினம். ஆனால் கடல்

தெய்வமே கன்னிமா என்று அழைக்கப்பட்டதாலும் அம்பாள் பாடல்கள் என்று இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அம்பாள் என்னும் பெயர் பொதுவாகப் பெண் தெய்வத்தைக் குறிக்கும்'[12] பாடலின் சூழலோடு சரியாக பொருந்துகிறது.

அந்த வகையில் 'ஆழி சூழ் உலகு' நாவலில் வரும் பரதவர்கள் காலம் காலமாக கட்டுமரம் வடிவமைப்பதற்கு அல்பீஸா மரங்களையே பயன்படுத்துகின்றனர். அதில் புதிய கட்டுமரம் தாயாரிப்பதற்காக தடிகளை இரண்டு, மூன்றாக கட்டி இழுத்து வந்தனர். அவ்வேலை கடினமாக இருப்பதால் வேலைப் பளுத் தெரியாமல் இருக்க அம்பாப் பாடலைப் பாடினர். அம்பாவை ஒருவர் முதலில் ஆரம்பிக்க, பிறகு மற்றவர்களும் உடன் சேர்ந்து குழுவாகப் பாடத் தொடங்கினர்.

'விக்டர், போடு
ஏலோ யீலோ
ஈலோடு வாங்கு
அட வாங்கடா தோழா
வளந்தாத் தருவேன்...
வளந்தாத் தருவேன்
தேங்காயும் மிளகும்...
தேங்காயும் மிளகும்
திருவெட்டப் பாக்கு...
திருவெட்டப் பாக்கு
மச்சேள் இஞ்சி...
மச்சேள் இஞ்சி
மணமுள்ள செம்பு...
செம்புக்கு வடிவே
திருமூடிக்கழுகு
தேரோட்டம் பாராய்
சின்னப் பொண்டாட்டி'[13]

மேற்கூறியப் பாடலானது, நாட்டுப்புறப் பாடல்களின் தன்மையில், ஒரு அடியே அடுத்தடியாகவும் வருமாறு பாடியுள்ளதிலிருந்தும் அறிலாம். எனவே நாவலில் இடம்பெற்றுள்ள அம்பாப் பாடல் மூலம் இம்மரபு மக்களிடையே பின்பற்றப்படுவதற்குரிய சிறந்த சான்றாகும். அடுத்து கட்டுமரத்தைக் கட்டி முடித்தப்பின் கரையிலிருந்து கடலுக்குள் செலுத்தும் போது வேலையின் கஷ்டம் தெரியாமல் இருக்கவும் அம்பாப் பாடல் பாடப்படுகின்றன. அவ் அம்பாப்பாடல்,

'ஏல ஏலோ அய்யா எலல ஏலோ
தாந்தத்தினா

எலல ஏலோ தாந்தத்தினா

கப்பலாளி அங்க தெரியுதடா

தாந்தத்தினா

கடலிலே மீன் அங்க குதிக்குதடா

தாந்தத்தினா

வேளாவும் கூரலும் பாறையுங் கட்டாவும்

வாளை கெழுது பனந்தொண்ட யோட

ஏல எலோ அய்யா

எலல ஏலோ

தாந்தத்தினா

எலல ஏலோ

தாந்தத்தினா'[14]

மூலம் மீனவர்கள் அப்போது கடலில் நடைபெறும் சூழலைக் காட்சிப் படுத்துக்கின்றார்கள். மேலும் அப்பாடலின் மூலம், கடலில் துள்ளிக்குதிக்கும் சில மீன்களின் பெயர்களையும் அறிய முடிகின்றது. இவ்வாறு பாடலின் வழி கடலோடு வாழும் மக்களின் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கண்முன்னே காட்சிப்படுத்தியுள்ளமை எழுத்துத்தாளரின் தனிப்பண்பேயாகும்.

இறப்புப் பாடல்கள்

மனித வாழ்க்கையின் முடிவே இறப்பு எனலாம். இவ்விறப்பு பல சூழல்களில் ஏற்படும். இறந்தவர்களின் சொந்த உறவுடைய மற்றும் நெருங்கியவர்கள் அச்செய்தியை அறிந்தவுடன் மனதில் எழும் உணர்ச்சியின் வெளிப்பாடே பாடலாக வெளிப்படுகிறது. இதனை 'ஒப்பாரி' என்றும் அழைப்பர். இதற்கு விளக்கம் அளிக்கும் சு.சக்திவேல் 'இறந்தவர்களின் இழப்பை எண்ணி இறந்தவர்களையும் தன்னையும் ஒப்பிட்டுப்பாடுவது ஒப்பாரியாகும்' எனக்கூறும் கருத்து இறப்புப் பாடலுக்கும் பொருத்தமுடையதாக உள்ளன. 'ஆழி சூழ் உலகு' நாவலில் கடலோடு தினந்தினம் அலைகளோடுப் போராடுபவர்கள் பரதவர்கள். அவர்களில் கடலுக்குள் மீன்பிடிக்க சூசை, சப்பாணி மற்றும் ஊமையன் என மூவரும் செல்கின்றனர். அப்போது கடலில் திடீரென்று ஏற்பட்ட கட்டுக்கடங்காத அலைகளின் சீற்றத்தால் கட்டுமரத்தைச் செலுத்த முயற்சித்தும், மூவரும் அலையின் வேகத்தைத் தாக்குப்பிடிக்க முடியாமல் கட்டுமரம் கவிழ, உடனே கடலில் குதித்தனர். மூவருமே ஒவ்வொரு திசையில் சென்று அலைகளின் அடிகளை வாங்கிக் கொண்டு நீரில் தத்தளித்தனர். இச்சூழலைக் கரையில் கண்ட கோத்ரா படகுகளை அனுப்பி மீட்க சொல்லி சூசையையும், சப்பாணியாரையும் மீட்டனர். ஆனால் ஊமையன் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. பிறகு மாலை ஆறுமணியளவில் கரையோரத்தில் ஊமையன் இறந்த நிலையில் இரண்டு கண்களையும் மீன்கள் தின்றுவிட்டப்படி கரையொதுங்கி இருந்தான்.

இவ்வாறு நாவலாசிரியர் இறப்பின் சூழலைத் திறம்படக் காட்சிப்படுத்தியமை மீனவர்களின் போராட்ட வாழ்வியலையும் சூழ்நிலையும் அறியலாம்.

ஊமையனின் இறப்பைத் தாங்கிக் கொள்ள முடியாமல், அவனுடன் இருந்த கணக்கப்பிள்ளையும், சக்ரீஸ்தரும் சாமியாரோடு சேர்ந்து இறப்புப் பாடல் பாடிக்கொண்டே வந்தனர். அப்பாடல்,

‘அந்த நாள் பெரிய நாள்
அழிவும் அவதியும் நிறைந்த நாள்
கசப்பு மிகுந்தே ஆ… பெரிய… நாள்
அப்போது வானமும்
பூமியும் அதிரும்
அப்போது உலகை
நெருப்பால்
நடுத்தீர்க்க வருவார்
கிறிஸ்துவே கிருபையாயிரும்
சுவாமி கிருபையாயிரும்’

உடனே அம்மக்களால் இறந்தவருக்கு செய்யும் எல்லாச் சடங்குகளும் முடித்தப் பிறகு, பாடகர்குழுவால் இறப்பிற்கான பாடல் பாடப்பட்டது.

‘சென்று வா கிறிஸ்துவனே
உலகை வென்று விட்டாய் நீ
விசுவாசத்தால் சென்று வா
கிறிஸ்தவனே’[15]

மேற்க்கூறிய பாடல்மூலம் நாவலில் இடம்பெற்ற ஆமந்துறை மக்கள், இறந்தவர்களை இறைவனாகக் கருதுவதும் புலப்படுகிறது.

குழந்தைப் பாடல்கள்

மனித இனத்தின் அடுத்த தலைமுறைகளே குழந்தை செல்வம் தான் என்றால் அது மிகையாகாது. எனவேதான் குழந்தைகள் பிறந்தது முதல் அவை வளர்ச்சியடையும் ஒவ்வொருப் பருவத்திலும் வாழ்க்கையின் சூழலுக்கேற்ப பாடல்கள் பாடப்படுகின்றன. அப்பாடல்கள் உள்ளத்தில் பதிந்துள்ள உண்மையின் உணர்வால் பிறக்கின்றது. குழந்தைகளுக்கானப் பாடல்களைப் நாட்டுப்புறவியலாளர்கள் பலரும் பல வகையாகப் பிரித்துள்ளனர். நாட்டுப்புற இயல் ஆய்வு என்ற நூலில் சு.சக்திவேல், ‘பொதுவாகச் சிறுவர் பாடும் பாடல்களை நாப்பயிற்சிப் பாடல்கள், எண்ணுப் பயிற்சிப் பாடல்கள், அறிவு வளர்ச்சிப் பாடல்கள், நீதிப் பாடல்கள், பக்திப் பாடல்கள், பறவை மிருகங்களைப் பற்றிய பாடல்கள், விழாக்காலப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், வினாவிடைப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள்’[16] எனப் பத்து வகைகளாகப் பகுத்துள்ளார்.

அந்த வகையில் நாவலிலும் மேரி தன் மகள் லூர்துவிடம் சிலுவைக்கு சாப்பிட இட்லியும் வடையும் வாங்கிட்டு வரச் சொல்ல, உடனே அம்மா கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்டு ஒருப்பாடலை பாடிக்கொண்டே போனாள்.

‘மண்ணால் மந்திரம் பிள்ளையை
உண்டாக்கி, அவருக்கு உறுதுணையாய்
ஒத்தாசையை உண்டாக்கி
அவள் கையால்
வடைகள் பல உருண்டு வர
திருவுளமான என் தயாபர
யேசுவே தயமாயிரும்’[17]

இப்பாடலில் வரும் அடிகளின் மூலம் அங்கு நிகழும் சூழலைப் பாடல்வழியே கொண்டுவரும் திறம் இவர்களிடம் உண்டு என்பதை அறிய முடிகிறது. இம்மக்கள் கடவுளை எப்பொழுதும் துணையாக இருக்குமாறும் வேண்டிக் கொள்ளும் பழக்கமும், பரதவர்களின் வழியில் வந்ததாக கருதும் இம்மக்களிடம் இருப்பதை பாடலின் வழியே அறியலாம்.

விளையாட்டுப் பாடல்கள்

குழந்தைகள் விளையாடும் சூழலின்போது மகிழ்ச்சியின் வெளிப்பாட்டால் உருவாகும் பாடல்களே விளையாட்டுப் பாடல்கள் எனலாம். நாம் குழந்தைகள் ஆடக்கூடிய விளையாட்டுகளை, பெண் குழந்தைகள் மட்டும் விளையாடும் விளையாட்டுகள், ஆண்குழந்தைகள் மட்டும் விளையாடும் விளையாட்டுகள் மற்றும் இருவர்களும் சேர்ந்து விளையாடும் விளையாட்டுகள் என பொதுவாகப் பிரித்துக் கொள்ளலாம். விளையாடும் ஆட்டங்களுக்கு ஏற்ப தனியாகவும் அல்லது குழுவாகவும் பாடல்கள் பாடப்படுகின்றன. அந்த வகையில் ஆழி சூழ் உலகு நாவலில் லூர்துவும் தன் பக்கத்து வீட்டுப் பெண்பிள்ளைகளோடு நொண்டி விளையாடும் போது பாடும் பாடல் பின்வருமாறு,

‘சங்கு சக்கர சாமி வந்து
சிங்கு சிங்கென ஆடுமாம்
உலகம் மூணும் அளக்குமாம் – அது
ஓங்கி வானம் பிளக்குமாம்
கலகலவென சிரிக்குமாம் – அது
காணக் காண இனிக்குமாம்’[18].

இவ்வரிகள் மூலம் நாவலில் இடம்பெறும் பரதவர்களின் குழந்தைகள், விளையாடும் போது பாடும் பாடல் நாட்டுப்புற பாடலின் சாயலில் அமைந்துள்ளது.

குடும்பப் பாடல்கள்

குடும்பப் பாடல்கள் என்பது ஒரு குடும்பத்தில் நிகழும் சம்பவங்களின் அடிப்படையில் பாடல்கள் அமைகின்றன. மேலும் இப்பாடல்கள் இன்ப துன்பங்களையும், நிகழும் சூழலையும், மையமாகவே வைத்து பாடப்படுகின்றன எனலாம். அதேபோல் நாவலில் இடம்பெறும் கோத்ராப் பிள்ளையும் ஒத்தப் பனமரத்துக் கள்ளைக் குடித்துவிட்டு குடும்பத்தில் ஏற்படும் சூழ்நிலையை வெளிப்படுத்தி, மனதிலுள்ள கவலைகளை பாடலாகப் பாடி வெளிப்படுத்துகிறார்.

'எல, பாடு படுகிறாம் கோத்துரா – அதன்

பலன அமுக்குறான் சில்வேரா.

உழைச்சி கொடுக்குறாம் கோத்துரா – அவம்

ஊர ஏய்க்கிறாம் சில்வேரா.

உண்டி சுருங்குறாம் கோத்துரா – அவம்

உண்டு கொழுக்குறாம் சில்வேரா.

கஞ்சி குடிக்குறாம் கோத்துரா – அவம்

கஞ்சா அடிக்காறாம் சில்வேரா...'[19]

என்னும் பாடல் ஆமந்துறையில் வாழ்ந்த கோத்ராப்பிள்ளையின் குடும்பத்தில் நிகழும் குழப்பங்களையும், ஏமாற்றங்களையும், தெளிவாக நாவலின் மூலம் அறியலாம். அடுத்து இப்பாடலில் கோத்ராப்பிள்ளையின் உடன்பிறந்த தம்பி சில்வேரா தம் குடும்பத்தில் இழைக்கும் கொடுமைகளையும் பாடி வெளிப்படுத்தியுள்ளார். இப்பாடல் கடலோடு வாழும் மக்களின் வாழ்க்கைச் சூழலையும் காட்சிப்படுத்துகின்றன எனலாம்.

ஜஸ்டின் என்ற கதாப்பாத்திரத்தின் மூலம் நிலையில்லாத இந்த உலகில் அடுத்த வினாடிக்கே உத்திரவாதம் இல்லாத நிலையில் எத்தனைப் போட்டி! எத்தனை பொறாமை! எத்தனை ஆசைகள்! கட்டுப்பாடற்ற ஆசைகளால் விளையும் விபரீதங்கள்! வாழ்க்கையின் நிலையாமையினைப் பாடலினால் வெளிப்படுத்துகிறார்.

'ஆழித்துரும்பெனவே அங்குமிங்கும்

உன்னடிமை பாழில் திரிவதென்ன

பாவம் பராபரமே'[20]

நாவலில் இடம்பெற்ற பாடல்கள் பெரும்பாலும் அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வியல் சூழல்களை வெளிப்படுத்தியதால், உண்மைநிலையினை அறிய முடிகிறது. ஆமந்துறையில்

வாழ்ந்த மக்களுக்கும் கடலுக்கும் இருக்கும் உறவையும் எழுத்துகளினால் நாவலில் பதிவு செய்துள்ளமை ஒரு குறிப்பிட்ட காலத்தின் வரலாறாகும்.

முடிவுரை

நெய்தல் நிலத்தில் உள்ள கடலையே தம் வாழ்க்கையாக எண்ணி, ஆமந்துறை என்ற ஊரில் வாழும் பரதவ மக்களின் வாழ்க்கை வரலாறே '**ஆழி சூழ் உலகு**' என்னும் நாவல். இந்நாவலின் வழி கடற்புரத்தில் வாழ்ந்த மக்களின் வாய்வழியே, பேச்சு வழக்கில் வெளிப்படும் நாட்டுப்புறப் பாடல்களை ஜோ டி குரூஸ் ஆவணப்படுத்தியுள்ளார். அப்பாடல்களே வழிபாட்டுப் பாடல்கள், அம்பா பாடல்கள், இறப்புப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள் மற்றும் குடும்பப் பாடல்கள் என்று நாவலில் இடம்பெற்றுள்ளன. மேற்குறிப்பிட்டப் பாடல்கள் பெரும்பாலும் நாட்டுப்புறப் பாடல்களின் மரபு தன்மையைப் பெற்றுள்ளது எனக் இக்கட்டுரையின் வழி அறிய முடிகின்றது. எனவே இப்பாடல்களைச் சேமித்து வைப்பது நன்று.

சான்றெண்விளக்கம்

1. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.13.
2. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறப் பாடல் வகைகள், ப.5.
3. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.9-10.
4. நாட்டுப்புற நந்தவனம், ப.1.
5. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.32.
6. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறப் பாடல் வகைகள், ப.14.
7. கி.வா.ஜகந்நாதன் (பதி), மலையருவி (நாட்டுப்புறப் பாடல்கள்), ப.10.
8. த.ரெஜித் குமார், நாட்டுப்புற இயல், ப.32.
9. ஆர். என். ஜோ டி குரூஸ், ஆழி சூழ் உலகு, ப.14.
10. மேலது., ப.70.
11. மேலது., ப.152.
12. நா.வானமாமலை, தமிழர் நாட்டுக் பாடல்கள், ப.446.
13. ஆர். என். ஜோ டி குரூஸ், ஆழி சூழ் உலகு, ப.113.
14. மேலது., ப.189.
15. மேலது., ப.316.
16. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.
17. ஆர். என். ஜோ டி குரூஸ், ஆழி சூழ் உலகு, ப.418.
18. மேலது., ப.477.
19. மேலது., ப.440.
20. மேலது., ப.514.

துணைநூற் பட்டியல்

1. ஜோ டி குரூஸ்.ஆர்.என், ஆழி சூழ் உலகு, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., 669, கே.பி.சாலை, நாகர்கோவில்-629001, மூன்றாம் பதிப்பு: டிசம்பர்-2023.
2. சக்திவேல்.சு முனைவர், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை-600108, பதிப்பு:
3. ஜகந்நாதன்.கி.வா (பதி), மலையருவி (நாட்டுப்புறப் பாடல்கள்), சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், ஐந்தாம் பதிப்பு: டிசம்பர்-2004.
4. ரெஜித்குமார்.த, நாட்டுப்புற இயல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.லிட்)., 41.பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600050.
5. இராமநாதன்.ஆறு டாக்டர், நாட்டுப்புறப் பாடல் வகைகள், புலமை வெளியீடு 38-இ, பீமண்ண முதலி தோட்டத் தெரு ஆழ்வார் பேட்டை, சென்னை-600018, பதிப்பு: சூன்-1982.
6. ஈசுவரி.ஏ.ஆர் முனைவர், நாட்டுப்புற நந்தவனம், அறிவுப் பதிப்பகம், 142, ஜானி ஜான் கான் ரோடு இராயப்பேட்டை, சென்னை-600014, பதிப்பு: பிப்ரவரி-2008.
7. வானமாமலை.நா (தொகு), தமிழர் நாட்டுப் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.லிட்)., 41.பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600050, பத்தாம் பதிப்பு: நவம்பர்-2022.